IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

M.C.O.P.No.54 /2014

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 04.07.2025.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | சங்கீதா | **Caste** | : | |
| **W/o** | **:** | | **Calling** | : | |
| **Village** | **:** | | **Religion** | : | |
| **Taluk** | **:** | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களுக்கு அழைப்பாணை வரப்பெற்றதன் பேரில் எனக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க அவா அங்கீகார கடிதம் அளித்ததன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். கடந்த 20.5.13 ந்தேதி நடந்த சாலை விபத்து சம்மந்தமாக TN 30 V 7241 என்ற நான்கு சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற மேட்டூர் வட்டம், காவேரிகிராஸ், நவப்பட்டி பொங்கியண்ணன் நகல் கதவு எண். 3/454 பெருமாள் மகன் கார்த்தி என்பவருக்கு மேற்படி வணிக வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பது குறித்து தகவல்கள் கோரப்பட்டிருந்தது. மேற்படி நபரின் ஓட்டுனர் உரிமம் எண் மற்றும் பிறந்த தேதி ஆகியவை இருந்தால் மட்டுமே அது குறித்த விவரங்களை தேடி கண்டுபிடிக்க இயலும் என்று குறிப்பிட்டு மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் தாக்கல் செய்கிறேன். மேற்படி கடிதம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விலாசம் எங்களுடைய அலுவலக எல்லைக்குட்பட்டது தான். ஆனால் மேற்படி நபரின் ஓட்டுனர் உரிமம் எண் மற்றும் பிறந்த தேதி ஆகியவை குறிப்பிடப்படாத காரணத்தினால் மேற்படி நபருக்கு ஓட்டுனர் உரிமம் எங்களது அலுவலகத்தால் வழங்கப்பட்டதா இல்லையா என்று கண்டறிய இயலவில்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி நபர் வேறு விலாசம் குறிப்பிட்டு வேறு ஆர்டிஓ அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் எடுத்திருக்கலாமா என்றால் எடுத்திருககலாம் என்னால் அது பற்றி கூற இயலாது.

ஒம்/-சங்கீதா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/- A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.